செய்தி வெளியீடு எண் 529 நாள்– **24.8.2009**

## இ.எஸ்.ஐ. மருத்துவமனைகளுக்குத் தேவையான மருந்துகள் வாங்க குழு அமைப்பு!

## முதல்வர் கலைஞர் ஆணை!

தமிழக அரசினால் நடத்தப்படும் தொழிலாளர் ஈட்டுறுதித் திட்ட மருத்துவமனை (Employees State Insurance Hospital) மற்றும் மருந்தகங்களில் உபயோகப்படுத்தப்படும் மற்றும் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் மருந்துகளை கொள்முதல் செய்ய ஒரு குழுவினை அமைத்து முதல்வர் கலைஞர் ஆணையிட்டுள்ளார். தமிழ்நாடு மருத்துவ சேவைக் கழகத்தின் நிர்வாக இயக்குநர் திரு.சந்தீப் சக்சேனா, ஐ.ஏ.எஸ். இக்குழுவின் தலைவராகவும்; தமிழ்நாடு சுகாதாரத் திட்ட இயக்குநர் டாக்டர். எஸ்.விஜயகுமார், ஐ.ஏ.எஸ். குழுவின் உறுப்பினராகவும்; தொழிலாளர் ஈட்டுறுதி மருத்துவமனைகளின் இயக்குநர் (Director, ESI Hospitals) டாக்டர் புருஷோத்தமன் விஜயகுமார் குழுவின் அமைப்பாளராகவும் செயல்படுவார்கள்.

இக்குழு தொழிலாளர் ஈட்டுறுதித் திட்ட மருத்துவமனைகள் மற்றும் மருந்தகங்களுக்கு என்னென்ன மருந்துகள் வாங்க வேண்டும் என்பதை பரிசீலித்து முடிவு செய்யும்.

**********

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**